# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில் 08.03.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல்பக்கராவின் 202 மற்றும் 287 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ ﴿۲۰۲﴾

*பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக! மறுமையிலும் வெற்றியை வழங்குவாயாக! எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக! என்று அவர்களுள் சிலர் வேண்டுகின்றனர். (2:202)*

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ۭ لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ ۭ رَبَّنَا لَا
تُؤَاخِذْنَآ اِنْ نَّسِيْنَآ اَوْ اَخْطَاْنَا ۚ رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَآ اِصْرًا كَمَا حَمَلْتَهٗ عَلَى
الَّذِيْنَ مِنْ قَبْلِنَا ۚ رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعْفُ عَنَّا ۪ وَاغْفِرْ لَنَا ۪
وَارْحَمْنَا ۪ اَنْتَ مَوْلٰىنَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿۲۸۷﴾

*பொருள்: அல்லாஹ் எவனுக்கும், அவனுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பைச் சுமத்துவதில்லை. அவன் சம்பாதித்த(நன்மையான)து அவனுக்கே. அவன் சம்பாதித்த (தீமையான)து அவனுக்கே. எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களைத் தண்டிக்கா திருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தைச் சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ அதனைச் சுமத்தாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களால் (சுமக்க) இயலாத(பாரத்)தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக. எங்கள் (குற்றங்களை) மன்னிப்பாயாக; எங்களைப் பொறுத் தருளுவாயாக; எங்கள் மீது கருணை காட்டுவாயாக; நீயே எங்கள் எஜமானன்; ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினருக்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக! (2:287)*

இந்த இரண்டு திருக்குர்ஆன் துஆக்கள் தொடர்பாக நான் சிலவற்றை எடுத்துக் கூறுவேன். ஆனால் அதற்கு முன்னதாக துஆவின் உண்மைத்துவம் யாது? அதன் தத்துவம் யாது? ஆகியவை தொடர்பாக சிலவற்றை எடுத்துக் கூறுவேன்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை வாசிக்கிறேன். அவர்கள் கூறுகிறார்கள்:**

கடினம் மற்றும் துன்பத்தின்போது இறைவனிடம் துஆ கேட்கின்ற ஒருவர் அவனிடம் தனது கஷ்டத்திற்கான தீர்வை வேண்டுகிறார். அவர் துஆவை அதன் எல்லை வரை கொண்டு செல்லும் நிபந்தனையைப் பூர்த்தி செய்தால் இறைவனிடமிருந்து மன நிம்மதியைப் பெறுகிறார். அவருக்கு, தான் வேண்டியது கிடைக்காவிட்டாலும் வேறுவிதமான திருப்தியும் மன அமைதியும் கிடைக்கிறது. அவர் ஒருபோதும் தோல்வி அடையமாட்டார். வெற்றி கிடைப்பது மட்டுமின்றி அவரது ஈமானின் நிலை உயர்கிறது; நம்பிக்கை வளர்கிறது. ஆனால், துஆ செய்வதுடன் எவர் இறைவன் புறம் முகம் திருப்புவதில்லையோ அவர் குருடர் ஆவார்; குருடராக மரணமடைகிறார்.

நமது இந்த சொற்பொழிவில், தவறான சிந்தனையுடைய பலருக்கும் பதில் உள்ளது. அவர்கள் கூறுகின்றனர். பலர் ஈடுபாட்டுடன் துஆ செய்கின்றனர். ஆனால் துஆவில் வெற்றி பெறுவதில்லை. அதாவது அவர்கள் விரும்புகின்ற குறிக்கோள் அவர்களுக்கு கிடைப்பதில்லை என்கின்றனர். இவர்களை ஒப்பிடுகையில் துஆ மற்றும் இறைவனை மறுக்கும் ஒருவர் உள்ளார். அவர் துஆ செய்கின்றவரை வென்று விடுகிறார். அவருக்கு எல்லாம் கிடைத்து விடுகிறது. பெரிய பெரிய வெற்றிகள் கிடைத்து விடுகின்றன என்று ஆட்சேபனை செய்கிறவர்கள் கூறுகின்றனர். எனவே நான் கூறியது போன்று துஆவின் குறிக்கோள் உண்மையான மன அமைதியும், ஆறுதலும், உண்மையான மகிழ்ச்சியும் அடைவதே ஆகும்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது அவர் வேண்டியது அவருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். துஆவை அதன் எல்லை வரை எட்ட வைக்க வேண்டும் என்பது இதன் முதல் நிபந்தனையாகும். எனவே உண்மையில் துஆ செய்பவர் வெளிப்படையானவற்றை பார்ப்பதில்லை. தொலைநோக்குப் பார்வையுடைய ஒரு மூஃமின், இறைவனின் தொடர்பை நன்கு அறிந்தவர் நான் கேட்டது எனக்கு கிடைத்ததா? என்று பார்ப்பதில்லை. மாறாக, மன நிம்மதியும், உண்மையான அமைதியும் பெறுகிறார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகின்றார்கள்:**

நமது உண்மையான மகிழ்ச்சி துஆவின் மூலமாக நாம் வேண்டுவது நிறைவேறும்போதுதான் கிடைக்க முடியும் என்பது சரியல்ல. மாறாக, நமது உண்மையான மன மகிழ்ச்சி எதில் உள்ளது என்று இறைவன் நன்கு அறிவான். முழுமையாக துஆ செய்த பிறகு அவன் நமக்கு அதை வழங்கி விடுகிறான்.

துஆ முழுமையாகவும், சரியாகவும், உண்மையாகவும், இறைவன் கூறியது போன்றும் இருந்தால் உண்மையான மன மகிழ்ச்சி எதில் உள்ளது என்று நன்கு அறிந்த இறைவன் அதை வழங்கி விடுகிறான். உண்மையான மனப்பான்மையுடன் துஆ செய்பவர் ஒருபோதும் இழப்பைப் பெற மாட்டார். மாறாக, செல்வத்தாலோ, அரசாட்சியாலோ, ஆரோக்கியத்தாலோ பெற முடியாது. உண்மையான மன மகிழ்ச்சி இறைவனிடம் உள்ளது. அவன் அதை எந்த வகையில் வேண்டுமானாலும் தரலாம். ஆனால் அது முழுமையான துஆவினால் மட்டுமே கிடைக்க முடியும். இறைவன் நினைத்தால் ஒரு தூய நல்லடியாருக்கு அவர் துன்பத்தில் இருக்கும் தருணத்தில் அளப்பரிய மன மகிழ்ச்சி கிடைத்து விடுகிறது. அந்த மன மகிழ்ச்சியானது ஒரு அரசனுக்கு அவன் அரியணையில் இருக்கும் போது கூட கிடைப்பதில்லை. ஆகவே இதற்குப் பெயரே உண்மையான வெற்றியாகும். இது இறுதியில் துஆ செய்பவருக்குக் கிடைக்கிறது.

துஆ செய்பவருக்குக் கிடைக்கும் மனமகிழ்ச்சியானது துன்பத்தின் போது கிடைக்கிறது. அப்படிப்பட்ட மன மகிழ்ச்சி ஒரு அரசனுக்குக் கூட கிடைக்க முடியாது என்று கூறுகிறார்கள். இதுவே துஆவின் உண்மைத்துவமாகும். இதுவே இதன் சுருக்கமான தத்துவமாகும். இதுவே ஒரு உண்மையான மூஃமினுடைய சிந்தனையாகும். இவ்வாறே இருக்கவும் வேண்டும். நாம் இதை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று துஆவை அதன் எல்லை வரை கொண்டு செல்ல வேண்டும். இந்த நிலையை அடைந்ததும் இறைவனிடம் மனிதன் வேண்டும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளம் வெளிப்படுகிறது. மனதிற்கு நிம்மதி கிடைக்கிறது. எந்த துன்பம் நீங்க வேண்டுமென்று துஆ வேண்டினானோ அது நீங்கி விடுகிறது. ஒரு குறிப்பிட்ட திருப்தி ஏற்படுகிறது. இனி அல்லாஹ்வின் பார்வையில் எது எனக்கு சிறந்ததாக இருக்குமோ அது வெளிப்படும். ஒரு உண்மையான மூஃமினிடம் இருக்கின்ற சிந்தனை இதுவாகும். அல்லாஹ் இந்த தரத்தை அடையும் நல்வாய்ப்பை நம் அனைவருக்கும் நல்குவானாக!

இந்த நல்வாய்ப்பும் இறைவனின் அருளால்தான் கிடைக்க முடியும். எனவே, இது கிடைப்பதற்கும் துஆ செய்ய வேண்டும்.

இப்போது நான் திருக்குர்ஆனின் இரண்டு துஆக்களின் பால் கவனமூட்ட விரும்புகிறேன். இந்த துஆக்களை நாம் ஓதுகிறோம். அதிகமானவர்கள் தெரிந்துள்ளோம். அதில் ஒன்று,

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّ فِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّ قِنَا عَذَابَ النَّارِ ۝

என்ற துஆவாகும். அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் வெற்றியை வழங்குவாயாக! மறுவுலகிலும் வெற்றியை வழங்குவாயாக! இந்த துஆவை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் குறிப்பாக ஓதி வந்தார்கள். ஸஹாபாக்களுக்கும் இதை ஓதுவதன் பக்கம் கவனமூட்டினார்கள். எனவே ஸஹாபாக்களும் இதை கவனமாக ஓதி வந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஒரு காலத்தில் ஜமாஅத் மக்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டினார்கள். குறிப்பாக ஒவ்வொரு தொழுகையின் கடைசி ரக்அத்திலும் ருகூவிற்குப் பிறகு நிற்கும் நிலையில் இந்த துஆவை ஓத வேண்டுமென்று கவனமூட்டினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் குறிப்பாக இந்த துஆவின் பக்கம் கவனமூட்டினார்கள். பல குத்பாக்களில் ஜமாஅத் மக்களுக்கு இந்த துஆவை ஓதி வருமாறு கவனமூட்டினார்கள். இதன் சுருக்கமான விளக்கத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

எனவே இந்த வகையில் இந்த துஆவிற்கு முக்கியத்துவம் உள்ளது. சொல்லப்போனால் இந்த துஆ எல்லா காலத்திற்கும் எல்லா நேரத்திற்கும் உசித்தமானதாகும். ஆனால் இந்நாட்களில் உலகெங்கிலும் குழப்பம் உள்ள நிலையில் இந்த துஆவை குறிப்பாக நாம் ஓத வேண்டும். ஹஸனா என்றால் நன்மை, பலன் தரக்கூடிய ஒன்று என்று பொருள். மேலும் தீங்கில்லாதது என்றும் பொருள். எல்லா வகையிலும் நல்ல விளைவைத் தரத்தக்க பணி அது அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்றதாக இருக்கின்றதென்றால் அது ஹஸனாவாகும். சில முஸ்லிம் நாடுகளில் அஹ்மதிகளாக இருக்கும் காரணத்தால் அஹ்மதிகளுக்கு சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே இந்த துஆவை குறிப்பாக செய்து வருவது அவசியமாகும். இறைவனின் எல்லா அருள்களிலிருந்தும் அஹ்மதிகளைப் பேரிழந்தவர்ளாக ஆக்க வேண்டும் என்று எதிரிகள் விரும்புகின்றனர். இன்னும் உயிர் வாழும் உரிமையைக் கூட பிடுங்கி விட விரும்புகின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்கள் இறைவா! உலகவாதிகளின் எல்லா சூழ்ச்சிகளுக்கு எதிராகவும் எங்களைக் காப்பாயாக! உனது எல்லா வகையான ஹஸனாவிலிருந்தும் எங்களைப் பேரிழந்தவர்களாக்க விரும்புகின்றனர். உனது அருளால் நாங்கள் இதைப் பெறக் கூடியவர்களாகி விட வேண்டும். இவ்வுலகில் எங்களது செயல்களும் உனது விருப்பத்தைப் பெற்றதன் காரணமாக மறுமையில் எங்களுக்கு வெற்றியை வழங்கக் கூடியதாக அமையட்டுமாக! நாங்கள் இவ்வுலகில் புரிகின்ற ஒவ்வொரு செயலும் உனது விருப்பத்தைப் பெறக் கூடியதாக விளங்கட்டுமாக! எதிரி எங்களது வியாபாரத்தில் இழப்பை ஏற்படுத்த விரும்புகிறான். எதிரியின் எல்லா தீய திட்டங்களும் தோல்வியடையும் விதத்தில் எங்களுக்கு ஹஸனாவை வழங்குவாயாக! எங்களை ஈமானிலிருந்து விலக்குவதற்காக அவர்கள் எங்களது ரிஸ்கில் இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். எனவே நீ முன்பை விட அதிகமாக தூய மற்றும் ஹலாலான ரிஸ்கை எங்களுக்கு வழங்குவாயாக! எங்களுடைய அண்டை அயலார் எங்களுக்கு துன்பம் தருபவர்களாக இருக்க வேண்டாம். எங்களது ஊர்வாசிகள் எங்களுக்கு துன்பத்தைத் தருபவர்களாக இருக்க வேண்டாம். எங்களது நகரத்தை எங்களுக்காக ஹஸனாவாக ஆக்குவாயாக! எங்கள் நாட்டை எங்களுக்காக ஹஸனாவாக ஆக்குவாயாக! எங்களுக்கு எதிராக தீய செயல்களில் ஈடுபடுபவர்களின் தீங்குகள் அவர்களின் பக்கமே திரும்பட்டுமாக! எங்களது தலைவர்களை கருணை கொண்டவர்களாக ஆக்குவாயாக! இறையச்சத்தை மேற்கொண்டு நடப்பவர்களாக இருப்பார்களாக! நீதியுடன் நடப்பவர்களாக

இருப்பார்களாக! இன்று முஸ்லிம் நாடுகளில் பல இடங்களில் நாம் பார்கிறோம். அரசாங்கத் தலைவர்கள் தான் அம்மக்களுக்கே ஒரு தண்டனையாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். தமக்குக் கீழுள்ளவர்களின் உரிமையைப் பேணுபவர்களாக இருப்பார்களாக! தற்போதய தலைவர் உனது பார்வையில் சீர்திருத்தம் பெறத் தகுதியற்றவர் என்றால் இந்த சிறப்புகளைக் கொண்டவரை நீ எங்களுக்கு தலைவர் ஆக்குவாயாக! இதனால் அவர்களின் மூலமாக எங்களுக்குக் கிடைக்கவுள்ள உலகக் காரியங்கள் எங்களுக்கு ஹஸனாவாக ஆகட்டுமாக! ஒவ்வொரு பலனும் உனது விருப்பத்தைப் பெற்றுத்தரக் கூடியதாக இருக்க வேண்டும். நண்பர்கள் எங்களுக்கு நல்லதை நாடுபவர்களாக இருப்பார்களாக! அன்பு செலுத்துபவர்களாக இருப்பார்களாக! துன்பத்தின் தருணத்தில் உதவுபவர்களாக இருப்பார்களாக! நன்மைக்கு நன்மையைக் கொண்டே பதில் தருபவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்தூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக மிகவும் விளக்கமாக எழுதியுள்ளார்கள். பாகிஸ்தானில் ஒரு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மவ்லவிகளைப் பின்பற்றி அஹ்மதிகளுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். ஆனால் நட்புறவைப் பேணும் பாகிஸ்தானியர்களும் உள்ளனர். நாம் எல்லா பாகிஸ்தானியரையும் குறைகூறி விட முடியாது. அல்லது ஜமாஅத்திற்கு எதிர்ப்பு நிலவி வரும் நாடுகளில் எல்லாரையும் குறைகூறி விட முடியாது. இவர்களில் நட்புறவைப் பேணுபவர்களும் உள்ளனர். நல்லியல்பு கொண்டவர்களும், அன்பானவர்களும் உள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஓர் அஹ்மதி எனக்கு பாகிஸ்தானிலிருந்து கடிதம் எழுதினார். அவர் கடந்த நாட்களில் கடத்தப்பட்டார். கடத்தியவர்கள் அவரிடம் ஒரு மிகப் பெரிய தொகையை வேண்டினார். அதை உடனே ஏற்பாடு செய்வது முடியாததாக இருந்தது. அவருடைய சகோதரர் இதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் கேட்ட தொகையை ஏற்பாடு செய்ய முடியவில்லை. நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, ஒரு குறிப்பிட்ட தொகையை இப்போது செலுத்திவிட்டு மீதமுள்ள தொகைக்கு ஜாமீன் கொடுங்கள் என்று கடத்தியவர்கள் கூறினர். அஹ்மதியின் ஜாமீனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் கூறினர். அஹ்மதி அல்லாத ஒரு நண்பர் இவருக்காக ஜாமீன் கொடுத்துள்ளார். இதனால் அவர் விடுவிக்கப்பட்டார். அஹ்மதி அல்லாத அந்த நண்பர் தமது உயிரையும் பணையம் வைத்து விட்டார். இனி அந்த கடத்தல்காரர்கள் இவரிடமிருந்து அந்த தொகையைப் பெற்றுக் கொள்வர். இவ்வாறு அஹ்மதிகளுக்காக தியாகம் புரியக்கூடியவர்களும் உள்ளனர். இன்றைய சூழ்நிலையிலும் கூட நன்மை செய்யும் மக்கள் அங்கு உள்ளனர். நட்பிற்கான உரிமையை நிறைவேற்றுபவர்கள் உள்ளனர். அவர்கள் தீவிரவாதிகளுக்கும், முல்லாக்களுக்கும் எதிராக உள்ளனர். நல்ல நண்பர்கள் கிடைப்பதும் உலக ஹஸனாக்களில் ஒன்றாகும்.

இவ்வாறே நான் ஒரு ரிப்போர்ட்டை படித்தேன். மாலியில் நமது ரேடியோ நிலையங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் நமது தப்லீக் மிகவும் பெரிய அளவில் நடந்து வருகிறது. இதைக் கேட்டு சில எதிரி ஆலிம்கள் அஹ்மதிய்யத்தின் பிரச்சாரத்தை தடுப்பதற்காக அரபு நாடுகளிலிருந்து உதவி பெற்று முடிந்த அளவு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இவ்வாறான மவ்லவிகள் நமது மவ்லவிகளுக்கு மிரட்டல் விடுப்பதுண்டு. ஃபோனில் நாங்கள் இதைச் செய்து விடுவோம்; அதைச் செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். இவர்கள் காஃபிர்களாவர். எனவே இவர்கள் கூறுவதைக் கேட்காதீர்கள் என்று மக்களிடம் நமக்கெதிராக தவறான பிரச்சாரம் செய்து வந்தனர். சிலர் இதில் வரம்பு மீறி விடுகின்றனர். அங்கு இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. எதிர்ப்பு எல்லை மீறி இருந்தது. அங்கிருந்த சில நல்லவர்களுக்கு, செல்வாக்கு உடையவர்களுக்கு தெரிய வந்ததும் அவர்கள் நமது முபல்லிக்கிற்கு நீங்கள் கவலைப்பட வேண்டாம்; வேலை செய்து கொண்டே செல்லுங்கள். நீங்கள் போதிப்பதுதான் உண்மையான இஸ்லாம். அதை நீங்கள் பரப்புங்கள். யாரும் உங்களைத் தடுக்க முடியாது என்று செய்தி அனுப்பினார்.

இவ்வாறு நல்ல நண்பர்களை அல்லாஹ் நமக்கு வழங்கிக் கொண்டே செல்கின்றான். அவர்கள் அஹ்மதிகள் இல்லை. எனினும் அஹ்மதிய்யத்தை பரப்புவதில் அவர்களுக்குரிய பங்கை ஆற்றுகின்றனர். இதுவும் ஒரு ஹஸனாவாகும். ஆக, ஹஸனா என்பதன் கருத்தை எவ்வளவு விரிவுபடுத்தினாலும் அது விரிவடைந்து கொண்டே செல்லும். இவ்வுலக வாழ்வின் எல்லா நிலையிலும் அல்லாஹ்வின் அருளை எவ்வளவு அதிகமாக வேண்டினாலும் அவை அனைத்தும் ஹஸனாவாகும். தனிப்பட்ட வாழ்க்கையில் நல்ல மனைவி கிடைப்பதும், நல்ல கணவன் கிடைப்பதும், நல்ல சந்ததிகள் கிடைப்பதும், நோயிலிருந்து பாதுகாப்பு பெற்ற வாழ்க்கையைப் பெறுவதும் ஆகிய அனைத்திலும் அல்லாஹ்வின் பார்வையில் எது சிறந்ததாக இருக்குமோ அவை யாவும் ஹஸனாவாகும். இதுவே ஒரு மூஃமினின் விருப்பமாகும். அவருக்குத் தேவையான அனைத்தையும் அல்லாஹ் வழங்க வேண்டும் என்பதே விருப்பமாகும். அது எல்லா வகையிலும் சிறந்ததாக இருக்க வேண்டும். ஏனென்றால், மறைவானவற்றைப் பற்றிய முழுமையான ஞானம் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கிறது. எனவே நமக்கு அக மற்றும் புற நிலையில் எது சிறந்தது? என்று அவனுக்கே நன்றாகத் தெரியும். நாம் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் தவறிழைத்து விடலாம். ஆனால் இறைவன் எந்தவொரு விசயத்திலும் தவறிழைப்பதில்லை. வெளிப்படையாக நாம் ஒருவரை நல்ல நண்பன் என்று கருதுகிறோம். ஆனால் அவரே இழப்பை ஏற்படுத்துபவராக ஆகிவிடுகிறார். பலமுறை இவ்வாறு நிகழ்கிறது. மக்கள், நண்பன் மீது நம்பிக்கை வைத்து வியாபாரத்தில் சேர்கின்றனர். ஆனால் அவர் இழப்பை ஏற்படுத்தி விடுகிறார். நாம் ஒருவரை தலைவராக்குகிறோம். ஆனால் அவரே இழப்பை ஏற்படுத்துபவராகி விடுகின்றார். ஜமாஅத் அளவிலான பிரச்சனைகளைத் தவிர நாம் அன்றாடம் வாழ்க்கையிலும் பார்க்கிறோம். சிலர் பேசும் போது அவர்களின் பேச்சு துன்பத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது. எனவே சரியான முறையில் ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தன் என்ற துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டால், பிறகு ஜமாஅத் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் மனிதன் தப்பித்துக் கொள்ளலாம். தப்பிப்பது மட்டுமின்றி அல்லாஹ்வின் அருள்களுக்கும் வாரிசாகலாம். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுபவராகலாம்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் – அதாவது மறுமையிலும் நன்மையாக இருப்பவை அனைத்தையும் வழங்குவாயாக! அதாவது அங்கும் வெளிப்படையிலும் அந்தரங்கத்திலும் சிறந்ததை வழங்குவாயாக! ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதை ஓரிடத்தில் இவ்வாறு விளக்குகிறார்கள். சிலர் மறுமையில் எல்லாமே நல்லதுதான் கிடைக்கும். எனவே மறுமைக்காக துஆ செய்து இதை மட்டும் இறைவன் ஏற்றுக் கொண்டால், இவ்வுலகிலும் நன்மை கிடைத்து விடும் என்று நினைக்கின்றனர். அங்கு அக மற்றும் புற அடிப்படையில் நன்மை என்பதன் பொருள் என்ன? இதை விளக்கியவாறு கூறுகின்றார்கள்.

மறுமையில் அனைத்தும் நன்மை தான். ஆனால் மறுமையிலும் சில இருக்கின்றன. அவை அகத்தால் நன்மையாகும். வெளிப்படையாக அவை நல்லதல்ல. உதாரணமாக நரகம். நரகம் மனிதனின் சீர்திருத்தத்திற்கான வழியாகும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. மறுமைக்காகவும் இறைவன் ஹஸனா என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான். எனவே இறைவா! எங்களது சீர்திருத்தம் நரகத்தில் வைத்து நடைபெற வேண்டாம். மாறாக உனது அருளால் நடைபெற வேண்டும். அகத்தால் நல்லதாக இருக்கக்கூடியதை மட்டுமே எங்களுக்கு தந்து விடாதே. உதாரணத்திற்கு நரகம் அது அகத்தால் நல்லதாகும். இதனால் இறைவனின் நெருக்கம் கிடைக்கிறது. ஆனால் வெளிப்படையில் அது தீயது. ஏனெனில் அது தண்டனையாகும். மறுமையில் ஹஸனா என்பது சொர்க்கம் மட்டுமே ஆகும். அதன் அகமும் புறமும் நன்மையாகும்.

இங்கு ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வுலக ஹஸனா மறுமையின் ஹஸனாவுக்கு காரணமாக அமைகிறது. இவ்வுலகில் அகமும் புறமும் நல்லதாக இருக்கின்ற ஒன்று அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:**

இவ்வுலகில் மனிதன் மகிழ்ச்சியடைய இரண்டு அம்சங்கள் அவனுக்குத் தேவை. உலகின் வாழ்க்கை மற்றும் அதில் ஏற்படுகின்ற சோதனைகள், துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பாக இருப்பதும், இரண்டாவது, தீமைகளும் ஆன்மீக நோய் ஆகும். இவை மனிதனை இறைவனை விட்டு விலக்கி விடுகின்றன. இவற்றிலிருந்து தப்பித்து விட்டால் உலகத்தின் ஹஸனா என்பது ஆன்மீகமாகவும் பௌதீகமாகவும் எல்லா தீய வாழ்க்கையிலிருந்தும் மனிதன் பாதுகாப்புப் பெற வேண்டும்.

*மனிதன் பலவீனமாகப் படைக்கப்பட்டுள்ளான். (4:29)* ஒரு நகத்தில் வலி ஏற்பட்டால் கூட வாழ்வது கடினமாகி விடுகிறது. இவ்வாறே மனிதனின் வாழ்க்கை சீரழியும் போது, உதாரணமாக ஒழுக்கங்கெட்ட பெண்களின் கூட்டமாகும். இவர்களது வாழ்க்கையில் எவ்வளவு இருள் நிரம்பியுள்ளது. விலங்குகளைப் போன்ற வாழ்க்கையாக அது இருக்கிறது. அவர்களுக்கு இறைவன் மற்றும் இறுதி நாள் என்பது தெரியாது. இறைவன் இம்மை மற்றும் மறுமை ஆகிய இரண்டிலும் நன்மையைத் தர வேண்டும. ஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் என்பதும் இவ்வுலகத்தின் ஹஸனாவின் கனியாகும். இவ்வுலக ஹஸனா மனிதனுக்கு கிடைத்து விட்டால் நற்செயல்கள் மறுமைக்காக உள்ளன.

இவ்வுலக ஹஸனாவை ஏன் வேண்ட வேண்டும்? மறுமையின் நன்மையை வேண்டினால் போதும் என்று மக்கள் கூறுகின்றனர். உடல் ஆரோக்கியம் போன்றவை மூலம் மனிதனுக்கு நிம்மதி கிடைக்கிறது. இதன் மூலம் தான் அவன் மறுமைக்காக ஏதாவது செய்ய முடியும். எனவே இவ்வுலகத்தை மறுமையின் வயல் என்று அழைப்பார்கள். இங்கு விதைப்பதை அங்கு சென்று அறுப்பீர்கள். உண்மையில் இறைவன் இவ்வுலகில் கண்ணியம், சுகம், சந்ததிகள் ஆகியவற்றை வழங்கினால் அவருக்கு சிறந்த செயல்கள் இருந்தால் அவருடைய மறுமையும் சிறப்பானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த வசனத்தின் இறுதியில் அல்லாஹ் வகினா அஸாபன்னார் என்று துஆ செய்யுமாறு கூறுகிறான். இதில் மறுமையின் நெருப்பின் பக்கம் மட்டும் கவனமூட்டப்படவில்லை. மாறாக, இவ்வுலகின் நெருப்பிலிருந்தும் பாதுகாப்புப் பெறுமாறு கவனமூட்டுகிறான். இவ்வுலகிலும் நெருப்பு உள்ளது. இந்த வசனத்தில் இம்மை மற்றும் மறுமை ஆகிய இரண்டு நெருப்பிலிருந்தும் பாதுகாப்புப் பெறுமாறு அறிவுறுத்துகிறான். உலகத்தின் நெருப்பின் தண்டனையும் பல்வேறு வகைப்படுகிறது. அவை இன்னல்களும் துன்பங்களும் ஆகும். அல்லாஹ் நாடினால் இவை தண்டனை ஆவதற்குப் பதிலாக ஹஸனாவாகி விடுகின்றன.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இவ்வுலகில் நெருப்பின் தண்டனைக்கு ஓர் உதாரணம் இன்றைய நாட்ளில் சில நாடுகளில் காணப்படும் மோசமான நிலைகளாகும். வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதோ அல்லது கடைவீதியில் உலாவிக் கொண்டிருக்கும் போதோ எங்கிருந்து துப்பாக்கித் தோட்டா வரும். அல்லது ஏதாவது குண்டு வெடிக்கும் என்று யாருக்கும் தெரியாது. எப்போது மனிதனை இரத்தக் கரையாக்கும் அல்லது அவனது உயிரைப் பறிக்கும் என்று யாருக்கும் தெரியாது. பல உயிர்கள் இவ்வாறு அழிந்து விடுகின்றன. அஸாபன்னார் என்று ஒருவர் துஆ செய்தால், இவ்வாறாக நமது அமல்கள் இருக்கும் போது அல்லது இப்படி வாழ்க்கை இருக்கும் போது அல்லாஹ் இந்த துஆவை ஏறறுக் கொண்டவாறு இவற்றிலிருந்து காப்பாற்றி விடுகிறான்.

தீவிரவாதிகள் இன்றைய நாட்களில் மாபெரும் தீங்குகளை இழைத்து வருகின்றனர். அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் இந்த துஆ அவசியமானதாகும்.

கடந்த நாட்களில் நமது ஒரு சகோதரர் வாலிபப் பருவத்தை உடையவர் 40, 45 வயது ஆகிறது. கராச்சியில் அவர் ஏதோ பொருள் வாங்குவதற்காக வீட்டிலிருந்து வெளியே சென்றார். அவர் சென்று 2, 4

நிமிடத்திற்குள் அங்கு ஒரு குண்டு வெடித்தது. கடந்த சில தினங்களுக்கு முன் வெடித்த இந்த குண்டு வெடிப்பில் 50 பேர் இறந்துள்ளனர். அதில் இவரும் ஒருவர் ஆவார். இவர் சஹீதாகியுள்ளார். இந்த தீவிரவாதிகள் ஆங்காங்கே நெருப்பை வைத்துள்ளனர். இவர்களின் தண்டனையிலிருந்து பாதுகாப்புப் பெற அல்லாஹ்விடம் அதிகமாக துஆ செய்வது அவசியமாகும். எப்போது எங்கு என்ன நடக்கும்? என்பது அல்லாஹ்வுக்கு நன்கு தெரியும். எனவே அவனிடமே மனிதன் வேண்ட வேண்டும். நான் வீட்டில் இருப்பதும் வெளியே செல்வதும் உன் அருளால் எனக்கு ஹஸனாவாகி விட வேண்டும். இந்த தண்டனைகளில் இருந்து என்னை காப்பாற்றுவாயாக! இவ்வாறே இறுதி நாளின் தண்டனையிலிருந்தும் என்னை காப்பாயாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை வாசிக்கிறேன். அவர்கள் கூறுகின்றார்கள்: யாருக்கு எல்லா வழிகளும் அடைபட்டுள்ளதோ அவருக்கு தான் துஆவின் தேவை ஏற்படுகிறது. இறைவன் ஒருவனைத் தவிர வேறு எந்த வழியும் இல்லாமல் தவிப்பவரின் உள்ளத்திலிருந்து தான் துஆ எழுகிறது.

கடந்த குத்பாவிற்கு முந்தைய குத்பாவில் நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஒரு மேற்கோளை ஆதாரம் காட்டி இந்தக் கருத்தை சற்று விரிவாக எடுத்துரைத்தேன்.

இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு தவிப்பவருக்குத்தான் துஆவின் அவசியம் ஏற்படுகிறது. மேலும் இறைவன் ஒருவனைத் தவிர வேறு எந்த வழியும் இல்லாதவருடைய உள்ளத்திலிருந்துதான் துஆ எழுகிறது.

ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா என்று துஆ செய்வது இறைவனை மட்டும் தமது ரப் ஆக நம்பியவர்கள் செய்யும் துஆவாகும். அவர்களின் ரப் –க்கு முன்னால் ஏனைய அனைத்து பொய் தெய்வமும் ஒன்றுமற்றவையாகும் என்று அவர்கள் அறிவார்கள். நெருப்பு என்பது கியாமத்தில் கிடைக்கும் நெருப்பு மட்டுமாகாது. மாறாக, உலகிலும் ஒருவர் நீண்ட ஆயுளை வாழும் போது உலகில் ஆயிரக்கணக்கான நெருப்புகள் உள்ளன என்பதை அவர் கண்டார். பலவகையான நெருப்பு உலகில் உள்ளது என்று அனுபவசாலிகளுக்கு நன்றாகத் தெரியும். பல்வேறு தண்டனைகள், அச்சம், பசி, பட்டினி, நோய், தோல்விகள், அவமானங்களும், வீழ்ச்சியும் ஏற்படும் வாய்ப்பு, ஆயிரக்கணக்கான துக்கங்கள், சந்ததிகள் மற்றும் மனைவி தொடர்பான கஷ்டங்கள், உறவினர்களுடன் தொடர்புகளில் ஏற்படும் சிக்கல்கள் ஆகிய அனைத்தும் நெருப்புகளாகும். எல்லா வகையான நெருப்புகளிலிருந்தும் எங்களைக் காப்பாயாக! என்று மூஃமின் துஆ செய்கிறார். மனித வாழ்க்கையைக் கசப்பாக்கி விடும் நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாயாக! என்று துஆ செய்கிறார்.

இரண்டாவது துஆவும் நமக்கு மிகவும் அவசியமானதும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். அது சூரா பக்கராவின் கடைசி வசனமாகும். அதை நான் தொடக்கத்தில் ஓதினேன். அதில் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான். அதாவது, ரப்பனா லா துஆஹிஸ்னா இன்னஸீனா அவ் அஹ்தஃனா – எங்கள் இறைவா! நாங்கள் மறந்தாலோ அல்லது நாங்கள் தவறிழைத்தாலோ எங்களை நீ உன் தண்டனையால் பிடிக்காதிருப்பாயாக! மறத்தல் என்பது அவசியமாக செய்ய வேண்டிய ஒரு முக்கியமான வேலையைச் செய்யாமல் இருப்பது என்பதாகும். ஒன்று, வேண்டுமென்றே அதை விடவில்லை. மாறாக அதை மறந்து விட்டோம் என்பதாகும். இரண்டாவது, இந்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்யவில்லை என்றால் அது நமக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் உணரவில்லை. பரவாயில்லை! செய்யாவிட்டால் என்ன? இது ஒரு சாதாரண வேலை தானே என்று நினைப்பது. எனவே அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும். மறதியாக இருந்து விடுவதை விட்டும் தவறிழைப்பதை விட்டும் எங்களைக் காப்பாயாக! என்று கேட்க வேண்டும்.

ஆனால் சில சமயம் இவ்வாறும் ஆகி விடுகிறது. அதாவது ஒரு வேலை அது முக்கியமானதாகும். ஆனால் எது முக்கியமானது? எது முக்கியம் இல்லாதது? என்று மனிதனுக்குத் தெரியாது. அதை செய்யாமல் இருப்பதால்

நமது ஆன்மீக வாழ்வில் பாதிப்பு ஏற்படும். அல்லது இறைவனுடன் நமக்குள்ள தொடர்பில் அது வேறுபாட்டை ஏற்படுத்தி விடும் என்பது மனிதனுக்கு தெரியாது. எனவே அல்லாஹ்வே! இவ்வாறு தவறு செய்வதை விட்டு எங்களைக் காப்பாற்றுவாயாக! இரண்டாவது, இவ்வாறான தவறுகளை நாங்கள் செய்திருந்தால் அதற்காக எங்களை பிடிக்காதிருப்பாயாக!

அவ்வாறே ஏதாவது ஒரு காரியத்தை தவறாகச் செய்வதன் விளைவாக, அல்லது செய்யக்கூடாத காரியத்தை செய்து விட்டால் அதற்காக எங்களை நீ பிடித்து விடாதே! எங்களுக்குத் தண்டனை வழங்கிவிடாதிருப்பாயாக! மேலும் எங்களுடைய குற்றங்களை மன்னிப்பாயாக! அதை மன்னித்து அதன் தீய விளைவுகளிலிருந்தும் உனது கோபத்திலிருந்தும் எங்களைக் காப்பாயாக! ஆனால் நாம் வேண்டுமென்றே தெரிந்து கொண்டே தவறான காரியத்தை செய்து கொண்டே இருந்தால் அல்லது தவறான முறையில் செய்து கொண்டே இருந்தால், நம்மை சீர்திருத்த முயற்சியே செய்யாமல் இந்த துஆவை மட்டும் செய்து கொண்டே இருந்தால் பிறகு இது துஆ ஆகாது. மாறாக, இது அல்லாஹ்வுடனும் துஆவுடனும் கேலி செய்யும் காரியமாகி விடும் எனவே துஆக்கள் சிறந்த விளைவுகளுக்காக செய்யப்படுகிறது. இறைவனை சோதிப்பதற்காக அல்ல. எனவே நமது செயல் எங்கு சரியானதாக இருக்குமோ அங்கு தான் நமது துஆவும் உண்மையான துஆவாகும். அதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அதன் முழுமை வரை அதை கொண்டு செல்ல வேண்டும்.

**அதன் பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:**

ரப்பனா வலா தஹ்மில் அலைனா இஸ்ரன் கமா ஹமல்தஹூ அலல்லஸீன மின் கப்லினா – முந்தையவர்களின் மீது சுமத்தப்பட்ட சுமையைப் போன்று எங்கள் மீது அதை சுமத்தாதிருப்பாயாக! இதன் காரணமாக அவர்களுக்கு தண்டனை கிடைத்தது.

இங்கு ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தொழுகைகளை நிறைவேற்றுதல் அல்லது திருக்குர்ஆன் ஓதுதல் ஆகியவற்றைக் குறித்து இது சக்திக்கு அப்பாற்பட்ட சுமை என்று கூறவில்லை. இறைவன் முன்னதாகவே லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா உஸ்அஹா என்று கூறி விட்டான். அதாவது அல்லாஹ் தனது கட்டளைகளை மனிதனின் சக்திக்கேற்ப வழங்குகிறான். இங்கு சுமையை சுமத்தாதிருப்பாயாக! என்று கூறியதற்கான பொருள், முந்தைய சமுதாயத்தவர்களுக்கு சில குற்றங்களின் காரணமாக தண்டனைகள் வழங்கப்பட்டன. அந்தத் தண்டனைகள் எங்கள் மீதும் இறங்கிவிட வேண்டாம். முந்தைய மக்கள் செய்த அந்த தவறுகளை நாங்களும் செய்து விடக்கூடாது. இதன் காரணமாக அவர்கள் அழிந்து விட்டார்கள். நாம் குற்றமும் செய்து கொண்டேயிருக்கிறோம். நமக்கு முன்னால் இருந்த மக்களுக்கு கிடைத்த தண்டனையும் கிடைக்கக் கூடாது என்றால் இது நடக்காது. இது அல்லாஹ்வின் பொதுவான சட்டத்திற்கு மாற்றமாகும். எனவே துஆவும் அத்துடன் தீமைகளை விட்டு விலகியிருப்பதற்கான முயற்சியும் மனிதனை தண்டனையிலிருந்து காப்பாற்றுகிறது.

முந்தைய மக்களின் தவறுகளின் காரணமாக அவர்களின் உரிமையைக் கவனத்தில் கொள்ளாத அரசாங்கம் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துமாறு செய்யப்பட்டது. எனவே எங்களுக்கு தண்டனையாக ஆகிவிடும் ஆட்சியாளர்களை விட்டும் எங்களைக் காப்பாயாக! உனது கோபத்தின் காரணமாக இந்த தண்டனை எங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இது கோபத்தின் காரணமாக என்றால் மிகவும் வேதனையுடன் துஆ செய்வது அவசியமாகும். இது ஒரு சோதனை என்றால் இந்த சோதனையை எங்களுக்கு எளிதாக்குவாயாக!

பிறகு இந்த துஆவை கற்பிக்கிறான்: ரப்பனா வலா துஹம்மில்னா மாலா தாகத்தனா பிஹி. சில நேரம் பிறருடைய தண்டனையின் விளைவும் மனிதனுக்கு ஏற்படுகிறது. ஏதாவதொரு வகையில் அதன் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இதிலிருந்து விலகுவதற்காக இந்த துஆவை கற்றுத் தருகிறான். அதாவது பிறருடைய

குற்றத்திற்கான தண்டனையின் பாதிப்புகளிலிருந்தும் எங்களைப் பாதுகாப்பாயாக! சண்டை மற்றும் போரில் அல்லது தீவிரவாத சண்டையில் குறிக்கோளின்றி சிலர் கொல்லப்படுகின்றனர். நான் ஏற்கனவே கூறினேன். அவர்கள் வேறு ஏதோ ஒரு குறிப்பிட்ட இன மக்களைக் கொல்ல விரும்புனார்கள். ஆனால் அங்கு சென்றவர்கள் எல்லாரும் இறந்து விட்டனர். இதில் பாவமறியாத குழந்தைகளும் மரணமடைகின்றனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மாலா தாகத்தனா பிஹி என்ற நிபந்தனை இங்கு வைக்கப்பட்டதன் காரணம், இங்கு கோபம் என்ற கருத்து இல்லை. மாறாக, உலகத் துன்பங்கள் மற்றும் சோதனைகள் ஆகியவற்றைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இறைவனின் சிறிய கோபத்தைக் கூட தாங்கிக் கொள்ளவே முடியாது. ஆனால் சின்னச்சின்ன சோதனைகள் வருவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் எப்போதும் மலர்கள் தூவப்பட்ட மேடையிலேயே நடந்து செல்வேன் என்று கூறவில்லை. மனிதனை சோதிப்பதற்காக நான் அவனுக்கு சோதனைகள் வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே உனது கோபத்திற்குக் காரணமாக அல்லாமல் உலகில் பொதுவாக எனக்கு வருகின்ற சோதனைகளின் தொடர்பாக நான் துஆ செய்வது என்னவென்றால், அந்த சோதனைகள் எனது சக்திக்கு அப்பாற்பட்டதாக இல்லாமல் இருக்க வேண்டும்.

மூஃமின் சோதனைகளை விரும்புவதில்லை. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று நான் மூஃமின்களை சோதிக்கிறேன் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே சோதனைகளை எளிதாக்குவதற்காக துஆ கற்றுத் தந்துள்ளான். பிறகு இவ்வாறு துஆ செய்யுங்கள் என்று கூறுகின்றான்:

வஃபுஅன்னா எங்களை பொறுத்தருள்வாயாக! தீய விளைவுகளை விட்டு என்னைக் காப்பாற்றுவாயாக! எனது தீய காரியங்களின் மீது திரையிடுவாயாக! நான் எந்த தவறான காரியமும் செய்யாததைப் போன்று ஆக்கி விடுவாயாக! அஃப்வ் என்பதன் பொருள் கருணையும் ஆகும். மனிதன் ஏதாவது ஒன்றை கைவிட்டு விட்டால் அது திரும்பவும் கிடைப்பதுதான் அதற்கான நிவர்த்தியாகும். எனவே வக்ஃபிர்லனா என்பதில் செய்யாமல் விட்ட காரியங்களை நீ உனது கருணையாலும் அருளாலும் நிவர்த்தி செய்வாயாக! வர்ஹம்னா அதாவது நான் செய்த தவறுகள் மற்றும் எனது முன்னேற்றத்தின் பாதையில் அது தடையாகும் அல்லது என் காரணமாக ஜமாஅத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படலாம் என்றால் எனது தவறுகளுக்காக என் மீது கருணை காட்டுவாயாக! முன்னேற்றத்தின் வழியிலுள்ள எல்லா தடைகளையும் அகற்றுவாயாக! அன்த்த மவ்லானா நீயே எங்களது எஜமானன் ஆவாய். மக்கள் எங்களது பலவீனங்களை உன்னை நோக்கி சுட்டிக் காட்டுவார்கள். இன்று உலகில் ஒரு ஜமாஅத்தாக உள்ளோம் என்று நாம் மட்டுமே வாதம் புரிகிறோம். ஒரு தனி நபர் ஏதாவது ஒரு தவறான காரியம் செய்தால் அதன் ஒட்டுமொத்த பாதிப்பும் சில நேரம் ஜமாஅத்தின் மீது ஏற்படுகிறது. எனவே இறைவா! மக்களோ எங்களது பலவீனங்களை உன் மீது சுமத்துவார்கள். இது இறைவனின் ஜமாஅத் என்று வாதம் புரிகிறது. அதற்கும் பிற ஜமாஅத்துகளைப் போன்று துன்பங்கள் ஏற்படுகின்றன. தண்டனையும் கிடைக்கிறது என்று மக்கள் கூறுவர். எனவே எங்கள் எஜமானன் நீயே ஆவாய். நீ எங்கள் மீது கருணை காட்டுவாயாக! எங்கள் பலவீனங்கள் யாவும் உன் மீது சுமத்தப்படும். இது இவர்களது வெறும் வாய்ப் பேச்சாகும். இறைவனுடன் இவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று மக்கள் கூறுவதால் நாங்கள் செய்கின்ற தப்லீக் பணிகளில் தடைகள் ஏற்படலாம். அது பாதிக்கலாம். இதனால் சிலர் நேர்வழியிலிருந்து பேரிழந்தவர்களாக ஆகிவிடக் கூடும். எனவே நாங்கள் உன்னிடம் கருணையை வேண்டுகிறோம். எமது தவறுகளையும் குற்றங்களையும் ஒப்புக் கொள்கிறோம். உன்னிடம் மன்னிப்பை வேண்டுகிறோம்.

ஃபன்ஸுர்னா அலல் கவ்மில் காஃபிரீன் எனவே உனது சிறப்பிற்குரிய பார்வையை எங்கள் மீது செலுத்தியவாறு எங்களுக்கு காஃபிர்களின் சமுதாயத்தின் மீது வெற்றியை வழங்குவாயாக! உனது பெயரையும்

தூதுச் செய்தியையும் நாங்கள் உலகில் பரப்புபவர்களாக இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் முஸ்லிம் அல்லாதவர்கள் அல்லது இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மட்டும் இஸ்லாத்திற்கு எதிராகப் பேசவில்லை. மாறாக முஸ்லமிம்களில் கூட ஒரு பிரிவினர் தப்லீகின் பணிகளில் தடையாக உள்ளனர். முஸ்லிம்களில் பெரும்பாலார் இஸ்லாத்தின் பெயரைக் கெடுக்கின்றனர். முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் நாம் செய்யும் தப்லீகில் தடையாக உள்ளனர். தீவிரவாதத்தின் சில கூட்டங்கள் இஸ்லாத்தின் பெயரால் உருவாகியுள்ளன. இவர்கள் முன் வைக்கும் தீவிரவாத இஸ்லாத்தின் விளைவாக நமது தப்லீகில் பாதிப்பு ஏற்படுகிறது.

அல்லாஹ்விடம் ஒரு குறிப்பிட்ட ஈடுபாட்டுடன் இந்த வகையிலும் துஆ செய்வது அவசியமாகும். பிறகு துஆவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த இல்ஹாமிய துஆ **ரப்பி குல்லு சய்யின் காதிமுக ரப்பி ஃபஹ்ஃபஸ்னீ வன்சுர்னீ வர்ஹம்னீ**. அல்லாஹ் நம்மை அவனது பாதுகாவலில் வைப்பானாக! நமக்கு உதவி புரிவானாக! நம்மீது கருணை காட்டுவானாக! இவ்வுலக மற்றும் மறுமையின் ஹஸனாவை வழங்கிக் கொண்டே செல்வானாக! இன்றைய நாட்களில் இந்த துஆவும் அதிகமாக செய்ய வேண்டும். **எனக்கும் இந்த துஆவின் பால் குறிப்பாக கவனமூட்டப்பட்டிருக்கிறது**. எனவே இந்த துஆவை குறிப்பாக எல்லா அஹ்மதிகளும் செய்து வர வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக! ஆன்மீக மற்றும் பௌதீக ஹஸனாக்களை நமக்கு வழங்குவானாக! நன்மைகளில் நிலைத்திருக்கச் செய்வானாக! தடுமாற்றங்களையும் பாவங்களையும் மன்னிப்பானாக! வருங்காலத்தில் இவற்றிலிருந்து எப்போதும் நம்மை காப்பானாக!

பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு நான் குறிப்பாகக் கூறுகிறேன். நீங்கள் உங்களை ஆய்வு செய்தவாறு இதன்பால் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். உங்களது தொழுகைகளில் இந்த துஆக்களுக்கு குறிப்பான இடம் அளியுங்கள். ஒவ்வொரு அஹ்மதியும் துஆவின் ஆன்மாவை தம்மில் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதற்கிணங்க துஆவை அதன் எல்லை வரை கொண்டு செல்ல வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக!

நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். கராச்சியில் ஒரு குண்டு வெடிப்பில் ஓர் அஹ்மதி சஹீதாகியுள்ளார். மேலும் ஜமாஅத்தின் ஒரு நீண்ட கால தொண்டர் ஒருவரும் வஃபாத் ஆகியுள்ளார். இவ்விருவரின் ஜனாஸா காயிப் தொழுகையை நான் ஜுமுஆவிற்குப் பிறகு தொழ வைப்பேன். இவர்களைப் பற்றிய சிறிய குறிப்பையும் நான் எடுத்துக் கூறுகிறேன்.

சஹீதானவருடைய பெயர் மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது அப்பாஸி ஆகும். இவர் நாதிர் பக்ஷ் அப்பாஸி சாஹிபின் மகன் ஆவார். மார்ச் 3, 2013 அன்று இவர் சஹீதானார். முபஷ்ஷிர் அஹ்மது அப்பாஸி சாஹிபின் குடும்பத்தில் இவரது கொள்ளுத்தாத்தா மதிப்பிற்குரிய துவங்கர் அலி அப்பாஸி சாஹிபின் மூலம் அஹ்மதிய்யத் கிடைத்தது. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கைகளில் பைஅத் செய்தார். இவரது குடும்பம் இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள அலிபூர் கீடா என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரது குடும்பத்தில் இவரது இரண்டு மாமாமார்கள் முஹம்மது சாதிக் ஆரிஃப் சாஹிப் மற்றும் முஹம்மது யூசுஃப் சாஹிப் குஜராத்தி ஆகியோர்கள் காதியானின் தர்வேஷ் ஆக இருந்தனர். இவரது தாத்தா இந்தியக் காவல்துறையில் பணிபுரிந்தார். ஓய்வு பெற்ற பின் வாழ்க்கையை அர்ப்பணித்தார். காதியானில் பைத்துல்மால் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்தார்கள்.

முபஷ்ஷிர் அஹ்மது அப்பாஸி சாஹிப் சஹீத் 1968 -ல் குஜரான்வாலாவில் பிறந்தார்கள். இவரது வயது 45 ஆகும். வேலைக்காக 1928 -ல் கராச்சி சென்றார்கள். சஹாதத்தின் போது கராச்சியின் ஒரு Garment Factory-ல் பணிபுரிந்து வந்தார். மார்ச் 3 ஆம் தேதி மாலையில் மக்ரிப் வேளையில் கராச்சியிலுள்ள

அப்பாஸ் டவுணில் ஒரு குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதன் விளைவாக 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இவரது வீடு அப்பாஸ் டவுணில் தான் உள்ளது. சம்பவம் நடப்பதற்கு சில நிமிடங்கள் முன்பு தான் இவர் சில மருந்துகள் வாங்கி வருவதற்காக வீட்டிலிருந்து சென்றார்கள். குண்டு வெடிப்பில் சிக்கிக் கொண்டார்கள். முபஷ்ஷிர் அப்பாஸி சாஹிப் குண்டு வெடிப்புக்கு மிக அருகில் இருந்தார்கள். சம்பவ இடத்திலேயே சஹீதாகி விட்டார்கள். தொடக்கத்தில் இவர் காணாமல் போய் விட்டதாக தகவல் கிடைத்தது. பிறகு தொலைபேசி மூலமாக தகவல் அறிந்து சென்று பார்த்த போது அடையாளம் தெரிந்தது.

முபஷ்ஷிர் அப்பாஸி சாஹிப் மிகவும் நல்லியல்பு கொண்டவர். குழந்தைகளுடனும் மனைவியுடனும் சகோதர சகோதரிகளுடனும் நல்ல முறையில் நடந்து வந்தார். இவரது மனைவி மற்றும் ஒரு மகள் கதீஜா முபஷ்ஷிர் 12 வயது, மகன் நாதிர் பக்ஷ் 10 வயது ஆகியோர் உள்ளனர். இது தவிர மூன்று சகோதர சகோதரிகள் உள்ளனர்.

இரண்டாவது ஜனாஸா ஜமாஅத்தின் நீண்ட கால தொண்டர் மதிப்பிற்குரிய டாக்டர் செய்யது சுல்தான் முஹம்மது சாஹித் சாஹிபின் ஜனாஸாவாகும். இவர் மார்ச் 3, 2013 அன்று 90 வயதில் வஃபாத் ஆகியுள்ளார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் அக்டோபர் 16, 1923 அன்று சாமஸ்கின் சேகுபூரா மாவட்டத்தில் பிறந்தார். இவரது தந்தை ஹஸ்ரத் செய்யது சர்தார் அஹ்மது சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார். இவர் மர்ஹூமை, பிறப்பதற்கு முன்பே வக்ஃப் செய்திருந்தார். இவர் லாஹூரின் இஸ்லாமிய கல்லூரியில் பி.எஸ்ஸி. முடித்த பிறகு 1940 -ல் அலிகர் முஸ்லிம் யுனிவர்சிட்டியில் எம்.எஸ்ஸி. வேதியியல் தேர்வில் வெற்றி பெற்றார். எம்.எஸ்ஸி. முடித்த பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்ளிடம் சென்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், இவரை வேதியியலின் லெக்சரராக காதியானின் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் நியமித்தார்கள். இவர் கல்லூரியின் தொடக்கக் கால ஆசியர்களுள் ஒருவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

ஹிஜ்ரத்திற்குப் பிறகு இவர் லாஹூரில் P.T.I. கல்லூரியில் கற்பித்து வந்தார். 1956 -ல் இவர் இலண்டன் வந்தார். 1958 -ல் யுனிவர்சிட்டி ஆஃப் இலண்டனில் Organic Chemistry -ல் Phd. பட்டம் பெற்றார். ரப்வாவிற்கு திரும்பி வந்ததும் T.I. கல்லூரி ரப்வாவில் 1953 வரை வேதியியல் பாடம் கற்பித்து வந்தார். 1963 -ல் இவர் மீண்டும் இலண்டனுக்கு வந்தார். Post Doctrate முடித்தார். Royal Institute of Chemical Society -ல் உறுப்பினரானார். பிறகு 1964 முதல் 68 வரை தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி ரப்வாவில் Prof. Head of Chemistry Department மற்றும் சில காலத்திற்காக Principal ஆகவும் பணிபுரிந்தார். 1972 -ல் கல்லூரியையும், ஜமாஅத்தின் கல்வி நிறுவனத்தையும் அரசாங்கம் வலுக்கட்டாயமாக நம்மிடமிருந்து ஆக்கிரமித்துக் கொண்ட பிறகு இவரை ராவல்பிண்டியின் கோல்டன் கல்லூரிக்கு பணிமாற்றம் செய்து விட்டார்கள். பிறகு இதர கல்லூரிகளிலும் இவர் Principal ஆக இருந்தார். 1986 -ல் இவர் ஓய்வு பெற்றார். இதன் பிறகு இவர் ரப்வாவின் கல்வி நிறுவனத்தின் தரத்தைப் பார்த்து இவர் தம் சார்பாக தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றைத் தொடங்கினார். ஜமாஅத் பள்ளிக்கூடம் அங்கு மீண்டும் திறக்கப்படும் வரை இந்த பள்ளிக்கூடம் சிறந்த முறையில் பணியாற்றி வந்தது. பிள்ளைகளையும் நன்கு கவனித்து வந்தது.

டாக்டர் சாஹிப் மிகவும் எளிமையான மற்றும் கருணையுடையவர் ஆவார். தேவை உடையவர்களுக்கு ஆதரவளிப்பவர். கல்வி பயில முடியாதவர்களுக்கு கல்வி உதவி புரிந்து வந்தார். எல்லாருடனும் மிகவும் அன்பாகவும், நேசத்துடனும் நடந்து வந்தார். தூய்மையான மனப்பான்மையுடன் ஆலோசனை கொடுப்பவர். ஆலோசனை கூறும் திறமை கொண்டவர். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் ஜாமிஆ நுஸ்ரத் கல்லூரி ரப்வாவில் Science Block ஒன்றை ஆரம்பித்தார். பாகிஸ்தான் உருவான பின்பு இவருக்கு லாஹூரின் இஸ்லாஹ்-வ-இர்சாத் செயலர் பொறுப்பு வழங்கப்பட்டது. 1956 முதல் 58 வரை இவர் இலண்டன் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும் இருந்திருக்கிறார். அப்போது இலண்டன் ஜமாஅத்தின் மால் செயலர் ஆகவும் கடமையை செய்திருக்கிறார்.

கிலாஃபத்துடன் இவருக்கு மிகவும் நெருங்கிய ஆழமான தொடர்பிருந்தது. இவருக்கு இரண்டு மகள்களும் இரண்டு மகன்களும் இருக்கின்றனர். இவர் மிகவும் எளிய முறையில் கற்றுக் கொடுப்பவர் ஆவார். நானும் சில நாட்கள் இவரிடம் படித்திருக்கிறேன். இவர் மாணவர்களை நண்பர்களாக்கி கற்றுக் கொடுப்பார்கள். மிகவும் எளியவர்.

முஜீப் அஸ்கர் சாஹிப் இவரைப் பற்றி எழுதுகிறார். ஒருமுறை லங்கர்கானா பாகிஸ்தானில் டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது இவர் லங்கர் கானாவுக்கு வந்தார்கள். இவரிடம் சில விருந்தினர்கள் வந்திருந்தனர். அவர்களுக்காக ரொட்டி வாங்க வந்தார்கள். ரொட்டி மிகவும் சூடாக இருந்தது. எனவே துணி கொடுங்கள். நான் துணியில் இந்த ரொட்டிகளை வைக்கட்டும் என்று அவரிடம் துணி கேட்டேன். அதற்கு அவர் நான் துணி கொண்டு வரவில்லையே! சல்வார் கமீஸ் புதிதாக அணிந்திருந்தார். தனது சல்வார் கமீஸின் துணியைக் காட்டி இதில் போடுங்கள் என்று கூறினார். இவ்வாறு ரொட்டியைக் கொண்டு சென்றார்கள். நான் ரொட்டியை இப்படி எடுத்துக் கொண்டு போகிறேனே என்று அவர் அதற்காக கூச்சப்படவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினருக்குக் கொண்டு சென்றார்கள். இந்த வகையில் அவர் மிகவும் எளியவராக இருந்தார்.

அல்லாஹ் இவரது பதவிகளை உயர்த்துவானாக! மன்னிப்பானாக! இவ்வாறே சஹீதின் தர்ஜாக்களையும் இறைவன் உயர்த்துவானாக! இவர்களின் குழந்தைகளுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **08.03.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456